# 39. அரசியல் மேலாளர்களுக்குத் தெரியாது

XYZ Ltd-இன் பொதுமேலாளர் (GM) திரு.S.P.குப்தா, இந்திய அரசாங்கத்தின் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தொழிற்சாலையிலிருந்து, அதே அமைச்சகத்தின் கீழ் உள்ள மற்றொரு தொழிற்சாலைக்கு மாற்றப்பட்டார். கடினமான சூழ்நிலையில் தொழிற்சாலையின் மாற்றத்தை நிர்வகிப்பதில் அவர் சிறந்த நிபுணத்துவம் பெற்றிருந்தார்.

முன்னதாக ஒரு தொழிற்சாலையை மாற்றியமைத்த அனுபவத்தின் நியமிப்பில் உற்சாகமாகவும், நம்பிக்கை-யுடனும், அதே போன்ற நிர்வாகச் சவால்களை எதிர்கொள்ளும் மற்றொரு மாற்றத்திற்கான பயிற்சியை அவர் எதிர்பார்த்தார்; ஒழுக்கமின்மை, நேரமின்மையை மீட்டமைத்தல் மற்றும் தொழிற்சாலையின் செயல் மற்றும் நிதித்திறனை அதிகரித்தல், அவற்றைத் தொடர்ந்து ஊழியர்களுக்கான ஊக்கத்தொகை மற்றும் வசதிகள் அதிகரித்தல், ஆகியவை அவர் செய்ய வேண்டிய பணிகளில் பிரதானமாக இருந்தன.

இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் அவர் வெற்றியும் பெற்றார். இருப்பினும், அவர் அசாதாரணச் சாதனையை அடைந்து, விருதுகளைப் பெறுவதன் மகிழ்ச்சியை அனுபவிக்கத் தொடங்குவதற்கு முன், அவர் நிறுவனத்தின் தலைமையகத்தில் ஒரு முக்கியமற்ற நிலைக்கு எதிர்பாராத விதமாக வெளியேற்றப்பட்டதால், வாழ்க்கையின் மிகப்பெரிய அதிர்ச்சிக்கு ஆளானார்.

மாநில மற்றும் மத்திய அரசாங்கத்தின் அரசியல் ஆதரவைக் கொண்ட ஓர் தொழிற்சங்க தலைவரின் வேலை நிறுத்தத்தால் இந்த நடவடிக்கை தூண்டப்பட்டது. தொழிற்சாலையின் செயல்திறனில் முன்னேற்றம் மற்றும் ஊழியர்களுக்குக் கிடைக்கும் பலன்கள் குறித்துப் பொது மேலாளரின் வேண்டுகோள்கள் வாரியத்தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களால் கேட்கப்படவில்லை. இவர்கள் தொழிற்சாலையைப் படிப்படியாகத் தனியார் மயமாக்க வேண்டும் என்று மாண்புமிகு கேபினட் அமைச்சருக்கு பரிந்துரைத்தனர் (நிறுவனம் சார்ந்த அமைச்சகத்தின் பொறுப்பில் இருந்தவர்). இதன்படி அமைச்சர் பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் தொழிற்சாலையின் GM அதை தனியாருக்கு விற்பதற்கு முயற்சி செய்கிறார் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது அப்படி தொழிற்சாலை தனியார் வசம் சென்றால் அதில் வேலை செய்யும் பல தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும் என்பதன் அடிப்படையில் அவர்கள் அனைவரும் வேலை நிறுத்தத்திற்கு தூண்டப்பட்டனர்.

முழு அத்தியாயத்தையும் நினைவூட்டி, GM கூறினார் “தொழிற்சங்கத் தலைவர் மருத்துவமனையில் பெண் ஊழியர் ஒருவரைத் தொந்தரவு செய்து பிடிபட்டார். தொழிற்சாலையின் தலைமை மேலாளர் தொழிற்சங்க தலைவரை பணிநீக்கம் செய்தார். இதற்கிடையே அவர் இரண்டு வார காலம் பயிற்சி விடுப்பில் வெளிநாடு சென்றார். அவர் திரும்பியதும் விஷயத்தைக் கவனிக்க நினைத்தேன், ஆனால் அதற்கு முன்னதாக மாநிலத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு உள்ளூர் அரசியல்வாதிகள் அவரது மனைவியை வேட்பாளராக்கித் தொழிற்சங்கத் தலைவரிடம் ஆதரவைக் கோரினர். என்ன நடக்கிறது என்பதை நான் அறியாமலேயே அனைத்தும் நடந்தன.

எனது நிலைப்பாட்டை குறித்து நான் எல்லோரிடமும் கெஞ்சினேன். எனது முயற்சியால் தொழிற்சாலையின் செயல்திறன் மேம்பாடு குறித்து எனது மாநில முதல்வர், எனது தலைவர் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களிடம் கூறினாலும் அது வீணாக போயிற்று.

"ஒருவேளை நான் மிகவும் கவனமாக இருந்திருக்க வேண்டும், என்னை கட்டுப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் ஏனென்றால் எனக்கு முன்பு பணி செய்த மேலாளர்கள் தொழிற்சாலையில் உள்ள ஒழுக்கமின்மை மற்றும் சுயநலங்களை குறித்து பெரிதாக கவலைப்படவில்லை. என்னுடைய காலகட்டத்தில் தொழிற்சாலையில் செயல் மற்றும் நிதி செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காட்டினாலும், ஊழியர்களுக்கு ஊக்கத் தொகையும் இதர பலன்களை அதிகரிக்கச் செய்தாலும் இறுதியாக எனக்கு தண்டனை தான் கிடைத்தது பலனேதும் இல்லை என்று அவர் புலம்பினார்"

கேள்வி
திரு. குப்தா என்ன செய்திருக்க வேண்டும்?